CC-0. In Public Domain. Digitized by eGangotri



சிருங்கிரி ஸ்ரீ சாரதாம்பாள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்ககிரி ஜகத்குரு
ஸ்ரீமதபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



சிருங்கிரி ஜகத்குரு
ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्
दक्षिणाम्नाय श्री शारदापीठम् शृङ्गेरी

PERSONAL SECRETARY
To His Holiness Sri Jagadguru
Shankaracharya Dakshinamnaya
Sri Sharada Peetham,
SRINGERI - 577 139 (Karnataka)

Camp : ஈரோடு,

Date : 13-12-87

திருமதி சாரதா நடராஜன் அவர்கள் சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாளுடைய பரம பக்தை. அவர் மிக பக்தியோடு ரசனை செய்த "நாதவர்ஷணி" என்கிற நூலை ஸ்ரீ ஜகத்குரு ஸன்னிதானம் அவர்கள் கடாக்ஷித்தார்கள். ப்ரதி ஒருவருக்கும் ஸ்ரீ சாரதாம்பாளின் அருள் அவஸ்யம். ஆகையால் சாரதோ உபாஸகர்களுக்கு இந்நூல் உபயோகமாகட்டும் என்றும், திருமதி சாரதா நடராஜன் அவர்களுக்கு ஸ்ரீ சாரதாம்பிகையின் பரிபூரண க்ருபை எப்பொழுதும் கிடைக்கட்டும் என்றும் ஸ்ரீ ஜகத்குரு ஸன்னிதானம் அவர்கள் ஆசீர்வதித்தார்கள்.

ஆசார்யாள் அருளிய ஆசீர்வாத மந்த்ராக்ஷதையும் ஸ்ரீ சாரதா சந்த்ரமௌளீஸ்வர பிரஸாதமும் இத்துடன் அனுப்பப்படுகிறது.

Personal Secretary
To His Holiness
Sri Jagadguru Shankaracharya Dakshinamnaya
SRI SHARADA PEETHAM,
SRINGERI - 577 139.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

SRIRANGAM
V. S. Krishnamurthi Rao
Professor of Music [Retd.]

32, Robertson Lane,
MADRAS - 600 028
Date : 28—12—87

முன்னுரை

குருபக்த சிகாமணி ஸ்ரீமான் பிக்ஷாண்டார்கோவில் G. இராஜகோபாலப் பிள்ளை அவர்களின் புதல்வி ஸ்ரீமதி சாரதா நடராஜன் அவர்கள் ஸ்ரீஹரிவாயுகுருவின் பிரேரணையினால் இயற்றியிருக்கும் அருட்கீர்த்தனைகள், "நாதவர்ஷிணி" என்கிற பெயரில் புத்தக ரூபமாக வெளிவருவதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். கூடிய சீக்கிரம் இந்தக்கீர்த்தனைகள் அவர்கள் மெட்டமைத்த படியே ஸ்வர ஸாஹித்ய புஸ்தகமாகவும் அச்சிட்டு இசை உலகிற்கு அளிப்பார்கள் எனவும் அறிகிறேன். ஒரே பாடாந்தரமாக அனைவரும் பாடுவதற்கு ஸ்வர ஸாஹித்ய உருவம் மிகவும் அவசியம் எனக்கருதுகிறேன். இறையருளும் குருவருளும் அவர்களுக்கு, ஸகல ச்ரேயஸ்ஸும் அளித்து, மேன்மேலும் இதைப்போன்ற தொண்டு அவர்கள் செய்வதற்கு இசை அன்பர்களும் வித்வான்களும் இந்தக் கீர்த்தனைகளைப்பாடி உற்சாகமும் அளிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

Srirangam V. S. Krishnamurthi Rao,

28—12—87.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

ஸமர்ப்பணம்

"மாத்ரு தேவோ பவ" என்பது உபநிடத் கட்டளை. இதனையே "பெற்றதாயும் பிறந்த பொன்னுடும் நற்றவவானினும் நனி சிறந்ததுவே" என்று கூறுவார்கள். "தாயினும் சிறந்த கோவிலுமில்லை" என்றும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றும் கூறுவார்கள். ஆனாலும் முறையே மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதாகவும் முன்னோர்கள் சொன்னதைக் கேட்டும் உணர்ந்ததாலும் மகிமை தாங்கிய குரு கடாக்ஷத்தினால்தான் நாம் ஜகன்மாதாவைக் காணமுடியும் என்பதை உண்மையின் பொருள் என்று உணர்கிறேன்.

மாயையைப்போக்கி அன்புநெறியில் பக்திசிந்தனையில், நாதரூபத்தில் தான் நாம் அன்னையை மானஸிகமாக காணமுடியும் என்ற பரம ரகசியத்தை நம் குரு க்ருபையால் உணரமுடிகிறது. இதற்கு ஆதாரமாக இந்த "நாதவர்ஷணி" என்ற சிறியநூலை ஸ்ரீ சிருங்கேரி மஹா ஸன்னிதானம் அவர்களின் வர்தந்தி சமயம் குரு ஸமர்பணமாக அவர்களின் திரு பாதார விந்தத்தில் ஸமர்ப்பிக்கின்றேன். ஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்களின் அனுக்ரஹத்தின் பேரில் இதனை வெளியிட முடிந்ததையும், ஸ்ரீ ஸன்னிதானம் அவர்களின் அருள் ஆசிகளை பெறவும் அறிவில் மிக சிறியவளான நான் அவர்களின் பாதங்களை நமஸ்காரம் செய்து (இந்நூலை) நாதவர்ஷணியை ஸமர்ப்பிக்கிறேன். இதுசமயம் எனது பெற்றோர்களுக்கும் எனது கணவர் அவர்களுக்கும், குரு அவர்களுக்கும் எனது அன்பான நமஸ்காரங்களை தெரிவிக்கிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ பராம்பிகையான "ஜகன்மாதாவை" துர்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி ரூபங்களில் நாம் வழிபடுகிறோம். அதன் பொருளாவது "ஸகல கஷ்ட நிவாரணம் பெற ஸ்ரீ துர்க்காம்பிகை உபாஸனை" ஐச்வர்ய கடாக்ஷத்திற்கு ஸ்ரீ மஹாலக்ஷ்மி உபாஸனை வாக்விலாசத்திற்கு ஸ்ரீ ஸரஸ்வதி ஆகிய ஸ்ரீ ஸ்ரீ சாரதே உபாசனை ஆகும். மிகவும் சக்தி நிறைந்த "வாக்தேவதை" ஆகிய ஸ்ரீ சாரதே மந்த்ர, யந்த்ரபீடமாக விளங்குகிறாள் என்பது உண்மை ஆகும். தக்ஷிண பீடமாக விளங்கும் "சிருங்ககிரி" க்ஷேத்திரம் உலகிலேயே அனந்த சக்தியும் அடங்கிய "வாக்தேவதா" பீடமாகும். அந்த "காளிம்ருதவர்ஷிணி"யை நான் என்றும் நமஸ்கரிக்கின்றேன். என் மாதாவை ஜகஜ்ஜனனியை ஸதா ஸர்வம் மானஸீகமாகவே கண்டு ஆனந்தம் மிக கொண்டதே கீர்த்தனங்கள் ஆகும். குற்றம் குறை இருப்பினும் "சக்திமாதா" எந்தனை உளமார மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி பணிவன்போடு வேண்டுகிறேன். இந்த க்ருதிகளை பலரும் பாடி ஆனந்திக்கும்படியும், மங்களகரமான பலனை எய்தி "சிருங்ககிரி ஸ்ரீ சாரதேயின் கருணை கடாக்ஷத்திற்கு பாத்திரமாகி மங்களமே உண்டாக பிரார்த்திக்கிறேன்.

(ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து)

நமஸ்காரம்

சாரதா நடராஜன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சாரதே நமஸ்தே.

ஸ்ரீ சாரதா தேவி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

ஸ்ரீ குருப்யோ நம:

ராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

பல்லவி

குரு சரண்யே (பரம, பரமேஷ்டி) பரமானந்த
ஸ்தித ப்ரக்ஞயோகி நிஷ்கள சங்கர (குரு)

அனுபல்லவி

சிருங்க கிரி வாஸ சங்கர பக்த விஜய
ப்ரும்ம காரிணி சாரதே வித்யா பீட (குரு)

சரணம்

ஆதி குரு சிஷ்ய த்வைத பந்த தேவ
பக்தி ந்ருஸிம்ம ரூப சந்த்ர சேகர வதன
குரு பக்தி விலாஸதி தர்ம ப்ரகாசபீட
அபிநவ வித்யா தீர்த்த மஹா கடாக்ஷ
பாரதி தீர்த்த (குரு)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

குருவின் பாதாரவிந்தங்களை நமஸ்க்கரிக்கிறேன். (பரம குரு பரமேஷ்டி குரு)களையும் நமஸ்காரம் செய்கிறேன். பரம ஆனந்தத்துடன் சிறிதும் நெறியில் வழுவாத நிலையில் யோகம் (தவம்) செய்துகொண்டு களங்கம் இல்லாத மனதை உடைய ஸ்ரீசங்கரரை நான் வணங்குகிறேன். ச்ருங்ககிரியில் (சிருங்கேரி மலையில்) வாசம் செய்து ''பக்த விஜயம்'' செய்வதற்கும் காரணமாக விளங்கும் ''ஸ்ரீ ஸ்ரீ சாரதா வித்யாபீடத்தில்'' அமர்ந்த குருவை நான் வணங்குகிறேன்.

குரு சிஷ்ய பாவத்தில் த்வைத பந்தத்தை உபதேசித்து வந்ததில் (குரு) நிருஸிம்மபாரதி ரூபமாய் தோன்றிய சந்த்ர சேகர பாரதி அவர்களையும் அந்த குரு பக்தியினால் அவர்களுக்கு தத்ரூபமாய் சிஷ்ய பத்தம் ஊடுருவி வரும் 'தர்ம பிரகாச பீடம்' அதில் வீற்றிருக்கும் ''அபிநவ வித்யா தீர்த்தரின்'' க்ருபா கடாக்ஷத்தையும் ''பாரதி தீர்த்தரின்'' க்ருபா கடாக்ஷத்தையும் என்றும் வணங்குகிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விநாயகர் க்ருதி

ராகம் : ரீதிகௌள தாளம் : ரூபகம்

பல்லவி

தோரண கணபதி நமஸ்தே
ஸகல வரதா அனுக்ரஹபலத (தோரண)

அனுபல்லவி

நிரந்தர நீரூபணை
பாரதி பூஜித சரண (தோரண)

சரணம்

ஓம்கார ப்ரணவஸ்வரூபா
தீனரக்ஷண சங்கர ஸுதா
ஸுக்ஞான நிவ்ருத்தே
ஸுகதர ப்ரவ்ருத்தே (தோரண)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

தோரண கணபதியாக விளங்கும் விநாயகரை நமஸ்காரம் செய்கிறேன். (ஸ்ரீ நரஸிம்மபாரதி காலத்திலிருந்து பிரசித்தி பெற்ற) இந்த தோரண கணபதியை வணங்கி அவருடைய அனுக்ரகங்களை பெற வேண்டும் என நமஸ்கரிக்கின்றேன்.

நிரந்தரமாக ஓர் இடத்தில் இருப்பதாக (சிருங்கேரியில்) நிரூபித்து காட்டி பாரதி வழி வந்தவர்களை முதலில் தன்னை வழிபட்டு வரவைத்த அந்த தோரண கணபதியை வணங்குகிறேன்.

ஓம்கார ப்ரணவ ஸ்வரூபத்தை காண்பித்தவர். தீனனை ரக்ஷித்த சங்கரனின் அன்பு மகன் ஆனவர், நல்ல ஞானத்தை கொடுக்க கூடியவர். சுகங்களையும் கொடுக்க வல்லவரான அந்த மஹா தோரண கணபதியை வணங்குகிறேன்.

இங்கு கார்ய சித்திக்கு பிரார்த்தனை செய்தல்

108 தேங்காய் உடைப்பதாகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : ஹம்ஸத்வனி தாளம் : ரூபகம்

பல்லவி

அக்ஷய மாம் – ஜகதீஸ்வரி
ரக்ஷது மாம் – பரமேஸ்வரி (அக்ஷய)

அனுபல்லவி

ஸுஜ்ஜக ஜீவன காரிணி
ஸஜ்ஜன பாலினி சாரதே (அக்ஷய)

சரணம்

மந்த ஹாஸினி ஹம்ஸ வாஹினி
மரகத மணி மய பூஷணி –
மங்கள வீணை தாரிணி
சங்கர பூஜிதே சாரதே (அக்ஷய)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

(ஜகம் எல்லாம்) தரணி எல்லாம் சுபீக்ஷமாக நிறைவாக ஆக்குகிறவளும், அதனைக் காத்திடுபவளுமான அம்பிகையே என்னை காப்பாற்று. ஸுகமான ஜீவனத்திற்கு காரணமாக என்றும் உள்ளவளும், நற்பண்புகளை உடைய எல்லோரையும் காப்பாற்றுபவளுமான சாரதே என்னை காப்பாற்று.

புன்சிரிப்புடனே அம்ஸ பக்ஷியை (மந்திரத்தை) வாஹன மாக கொண்டு அதில் அமர்ந்திருப்பவளும், நவரத்தினத்தினால் ஆன ஆபரணங்களை அனிந்திருப்பவளும், மங்கள வீணையை ஏந்தி இருப்பவளும் சங்கரரால் பூஜிக்கப்பட்டவளுமான சாரதே என்னை காப்பாற்றுவாயாக.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : பைரவி தாளம் : சாபு

பல்லவி

ஆனந்த சுந்தரி — சாரதே
அகில புவன ஜனனி — பாஹிமாம் (ஆனந்த)

அனுபல்லவி

அணிமாதி சித்திஸ்வரூபிணி — அம்பா
காதி, ஹாதி, ஸாதி வித்யா ரூபிணி (ஆனந்த)

சரணம்

மாதங்கி மரகதாங்கி
மங்கள வரப்ரதாயினி
மஹாதேவ மனோல்லாஸினி
வேணி கீர்வாணி – அம்பா
சிருங்க கிரி நிவாஸினி சாரதே (ஆனந்த)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

ஆனந்த மயமாக அழகாக வீற்றிருக்கும் சாரதே, அகில புவனங்களையும் காந்திடுபவளே என்னையும் காப்பாற்று அம்மா. அணிமாதி என்கிற பத்துவிதமான சக்திகளை கொண்டவளும், காதி, ஹாதி, ஸாதி மந்திரங்களைக் கொண்ட வித்யா ரூபிணியான சாரதே என்னை காப்பாற்று அம்மா.

மாதங்கி என்ற பெயரை கொண்டவளே, மரகதங்களை ஆபரணமாக கொண்டவளே, மஹாதேவனுகிய சிவனின் மனத்திலே உல்லாசமாக வீற்றிருப்பவளே, வாக்தேவதையே சென்நிறம் வாயில் வடிய அந்த அழகினைக் கொண்டு சிருங்கேரியில் வாசம் செய்பவளே அம்மா என்னை காப்பாற்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : பூர்விகல்யாணி தாளம் : ரூபகம்

பல்லவி

சாரதே பூர்வகல்யாணி
கனக பூஷணி சரணம் (சாரதே)

அனுபல்லவி

நீரஜ நயனே — நிரஞ்ஜனி
நிகமாகம மந்த்ரரூபிணி (சாரதே)

சரணம்

பரமக்ஞான பீட வாஸினி
பரமேஸ்வர ப்ரியதர்ஸினி
தர்மலோக ஸாக்ஷி — நிதர்ஸினி
ஸர்வலோக பக்தகுரு வசங்கரி (சாரதே)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

ஸகலாபரண பூஷிணியாகவும், நித்யகல்யாணியாகவும் வீற்றிருக்கும் சாரதே உன்னை வணங்குகிறேன். அழகிய கண்களுடன் எங்கும் நிறைந்திருப்பவளே, வேதாகம மந்திர ஸ்வரூபிணியானவளே சரணம் அம்மா.

அக்ஞானத்தைப் போக்கும், ஸுகஞான (ஞான) பீடத்தில் அமர்ந்திருப்பவளே, அந்த பரமேஸ்வரரின் அபிமானத்திற் குறியவளாக தோன்றுபவளும், லோகத்திலே தர்மத்தையே நிலை நிருத்துபவளும், மூவுலகத்தையும் குருவின் சாதனைகளாலே தன் வசப்படுத்துபவளுமான சாரதே உனது சரணரவிந்தத்தை வணங்குகிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : காபி தாளம் : ஆதி

பல்லவி

தக்ஷிண பீட வாக்தேவதே ஸ்ரீ
சாரதே அம்பா ரக்ஷிமாம் ஸ்ரீ (தக்ஷிண)

அனுபல்லவி

சிக்ஷித ரூபிணி ஆகம மந்த்ரிணி
ரக்ஷித லோக சங்கர பூஜிதே (தக்ஷிண)

சரணம்

சங்கர ஸ்தாபித துங்காதீரே
கிங்கிணி நாத ஸ்திர மந்தாரே
மங்கள கரவன — சிருங்காரிணி அம்பா
மண்டுக, ஸர்ப்ப, ஸ்நேக ஹ்ருத்சந்தோஷிணி
(தக்ஷிண)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

தக்ஷிண பீடத்தில் வீற்றிருப்பவளும் வாக்விலாசத்திற்கே சிறந்து விளங்குகின்ற சாரதா தேவியே என்னை காப்பாற்று அம்மா. உபதேசித்த வேகமந்த்ர ரூபிணியான அம்பிகையே லோகத்தையே காப்பாற்றுபவளும், சங்கரரால் பூஜிக்கப் பெற்ற சாரதே என்னை காப்பாற்றுவாயாக.

துங்கா நதி அருகில் கிங்கிணியின் மணி ஓசையுடன் மந்தார வேளையில் ஸ்திரமாய் சங்கரரால் ஸ்தாபனமானவளும், அந்த மங்கள கரமான வனத்தில் தவளையும், பாம்பும் அதன் ஸ்நேக பாவத்தைக் கண்டு அகமகிழ்ந்து அதே இடத்தில் வீற்றிருப்பவளுமான சாரதே என்னை காப்பாற்று அம்மா.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : ஸ்ரீரஞ்ஜனி தாளம் : மிஸ்ரசாபு

பல்லவி

சாரதே ஸ்ரீரஞ்ஜனி சித்கலாஸ்வரூபிணி (சாரதே)

அனுபல்லவி

மாரகோடி தோஜோமய ப்ரகாஸினி
மங்களவர மனோஹரிதேவி (சாரதே)

சரணம்

அஷ்ட தச அலங்கிருத ஸ்திதே
அரவிந்த மணி மகுட பூஷணி
அஷ்டாங்க யோகா அனுக்ரஹ பலதே
ஆ! ஹி! ஹ்ரூ மந்த்ரா அக்ஷரநுதே தேவி (சாரதே)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

நினைத்த மாத்திரத்தில் மனோரசனையால் ஆனந்தமாக தரிசிக்கும்படியான நாத ஸ்வரூபத்தை கொண்ட ஸ்ரீ மாதா! கண்கள் கூசும்படியான கோடி சூர்ய ஜோதியாக ப்ரகாசிக்கின்றவளே மங்களம் தருபவளே தேவி சாரதே!

தசவித சக்திகளுடன் எட்டு கோணங்களையும் அலங்கரிக்கின்ற அன்னையே தேவி! பாம்பின் மணி மகுடத்தை தரித்துக் கொண்டவளே! அஷ்டாங்க யோக சக்திகளையும் கொடுக்க கூடியவளே, ஆ, ஹி, ஹ்ரீ மந்த்ரா அக்ஷர (எழுத்தின் வடிவம்) கொண்டவளே தேவி சாரதே!!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : ஷண்முகப்ரியா தாளம் : மிச்ரசாபு

பல்லவி

சௌந்தர்ய வதனி சாரதே
ஸ்வர்ண மய ரூபிணி தேவி (சௌ)

அனுபல்லவி

கௌமாரி காத்யாயணி கீர்வாணி
கிரி ராஜ ஜனனி—தேவி (சௌ)

பல்லவி

மாத்ரு மண்டல மஹா மேரூஸ்தித
மாதா க்ருபா ஸாகரி, மாதவஸோதரி
ஸதா ஸுபகரி, ஸர்வேஸ்வரி
காமேஸ்வர ஷண்முகப்ரிய ஜனனி
காமிதார்த்த பலப்ரதாயினி தேவி (சௌ)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

அழகிற்கு அழகே! உவமையான வடிவம் கொண்டவளே சாரதே!! உலகெல்லாம் படைத்தவளே! தங்க மயமான பொன் மேனியைக்கொண்ட தேவியே அம்மா.

கௌமாரி காத்யாயணி என பலவிதமான பெயர்களைக் கொண்ட மலை அரசனின் மகளே தேவி காப்பாற்று.

ஸ்ரீ சக்ரத்தில் மஹா தேவியாக நடுவில் வீற்றிருப்பவளும் அம்பா உனது கருணையை அள்ளிக் கொடுப்பவளும், திருமாலின் சோதரியும் ஆனவளே, எப்பொழுதும் சுபத்தைக் கொடுக்கக் கூடியவளுமான எல்லா உலகிற்கும் அரசியே!! ஈசனின் அன்பு மகனை முருகனை பெற்றெடுத்தவளே! கேட்டவரங்களை தரக் கூடியவளே தேவி காப்பாற்றுவாயாக.

3.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : ரேவதி

தாளம் : ரூபகம்

பல்லவி

சாரதே பாஹிமாம் — பரமேஸ்வர
ப்ரியகர ஸகி (சாரதே)

அனுபல்லவி

மாதுர்ய கானம்ருத வர்ஷணி
மதுர பாஷிணி மாதங்கி (சாரதே)

சரணம்

கங்க சைல துங்கதீர
சங்கர நிஜ பக்த வசங்கரி
பங்கஜாக்ஷி சிவசங்கரி
சங்கர நிஜசுக சம்பாஷிணி (சாரதே)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

சாரதே என்னை காப்பாற்று. அந்த பரமசிவனின் அன்பிற்கு மிகவும் பாத்திரமான அம்மா! என்னை காப்பாற்று.

ஆனந்தமாக, அமிர்தமான இன்னிசையை பொழியக் கூடிய-வளே, மதுர (தேன்) மொழிகளால் ஆன அன்னையே சாரதே என்னை காப்பாற்று,

கங்கா நதி தீரத்தில் பிறந்து, துங்கா நதி தீரத்தில் வந்து அமர்ந்து, சங்கரரால் பக்தியுடன் பூஜித்த வன சங்கரியே! அழகிய கண்களை உடையவளே! சிவனுடையவளே! சங்கரருடன் உண்மை யாகவே சுகமாகவே பேசிக்கொண்டிருப்பவளே சாரதே என்னை காப்பாற்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : ஸ்ரீராகம் தாளம் : ரூபகம்

பல்லவி

சாரதே சர சந்த்ர வதனி
ச்யாமளே கலா வர்ஷணி (சாரதே)

அனுபல்லவி

பாரதி பூஜித நிஷ்காமகலே
ஸகலே ஸர்வாவரண பூஷணி (சாரதே)

சரணம்

ஸர்வ ஸாக்ஷி நாத பிந்து
ஸர்வேஸ்வரி சாந்தி ரூபிணி
ஸர்வ மங்கள தாயினி ஜனனி
ஸதா ஹ்ருதயே வஸ்து சாரதே (சாரதே)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

சரத்கால சந்திரனை ஒத்த மேனியைக் கொண்ட சாரதே ! ச்யாமளே !! அறுபத்து நான்கு கலைகளையும் (வர்ஷித்து) பொழிந்து கொண்டே வீற்றிருக்கும் அம்பா.

குருவினால் பூஜிக்கப்பட்டு சிவசக்தி ரூபமான காமகலே யாதுமாய் தோன்றும் ஸர்வ ஆபரண பூஷித சாரதே அம்பா.

பிந்துவின் மத்தியில் நாதமே வடிவமாய் நீயே ஸாக்ஷியாக சாந்தமே உருவாக வீற்றிருப்பவளும், ஸர்வ மங்களத்தையும் கொடுக்ககூடியவளும் எப்பொழுதும் எனது ஹ்ருதயத்திலே வாசம் செய்பவளே அம்பா சாரதே !!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : அமிர்தவர்ஷணி

தாளம் : ரூபகம்

பல்லவி

வாணியே சரணம் – மதுர
பாஷிணியே சரணம் – தேவி (வாணி)

அனுபல்லவி

வேணீ வீணு பல்லவ பாணி
கானும்ருத வர்ஷணியே (வாணி)

சரணம்

ஸகல காரணி ஸக்திரூபிணி
ஸர திந்து சுந்தரி வாக் விலாஸினி
மங்கள கீத தாயினிமாதங்கி
வந்தேஹம் வரப்ரதாயினி (வாணி)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

ஸரஸ்வதியே சரணம், மதுரமான வாக்கை உடையவளே உனது பாதம் பணிந்தேன்.

வாணீ வீணையை ஆனந்தமாக இசைக்க வல்லவள் அதனுடன் கானம்ருதமாக இசைத்து பொழிந்தவள் உனது பாதம் பணிந்தேன்.

ஸகல கார்யங்கள் செய்ய, அருள் சக்தியும் தருபவள், சந்திரனை ஒத்த குளுமையான அழகையுடையவள், நாவிற்கு அரசியானவள், மங்கள கீதத்தை ஒலித்துக்கொண்டு இருப்பவள். தன்னை பணிந்து வந்தவர்களுக்கு கேட்ட வரங்களை தரக்கூடிய ஸரஸ்வதியே !! உனது பாதம் பணிந்தேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : வஸந்தா

தாளம் : ரூபகம்

பல்லவி

ருஷ்ய ச்ருங்க கும்ப ஸ்தித
ச்ருங்ககிரி விசேஷ நிலய (ருஷ்ய)

அனுபல்லவி

பாஷ்ய விசேஷண பக்த பரிபாலன
சிஷ்ய பரம்பரா அனுக்ரஹ பலத (ருஷ்ய)

சரணம்

ரத சக்ர ப்ரதக்ஷண விசேஷண --
கஜ துரக பதாதி ஸந்நுத
பாஸ்கர கிரண நவ த்வார விசேஷண
சங்கரார்சித பக்த குரு சங்கர
சந்த்ர மௌளீஸ்வர ஸந்நுத பாதே (ருஷ்ய)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

சிருங்ககிரியில் மிகவும் விசேஷமாக தோன்றுவது ருஷ்ய சிருங்கரருடைய ஆலயமாகும். அருள் மொழிகளும், வழிகளும் இன்றும் குருவின் வழிவந்தவர்களுக்கும், பக்தர்களுக்கும் கிடைக்கின்ற முக்கிய ஸ்தானதியாகும்.

கோயில் சுற்றிவரும்போது அதன் விசேஷமான சக்ரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதும், அதன்மேல் குதிரை, யானைகளுடன் (பிம்பம்) பலவும் இருப்பதும், சூரிய வெளிச்சமானது நவத்வாரங்கள் வழியாக தெரியும்படியாக அமைந்திருப்பதும், சங்கராசார்யார் பக்தியின் மேல்லிட்டில் தன் சன்னதியிலே ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வரர் ஸன்னிதியும் விசேஷமாக அமைந்துள்ளதையும் என்றுமே நாம் மறக்க முடியாத நிலைக்கு சான்றுகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : ஸரஸ்வதி

தாளம் : ரூபகம்

பல்லவி

மரகத மணி பூஷணி ஸ்ரீ மூக்காம்பிகே தேவி
மனோல்லாஸினி ஸிம்ஹவாஹினி மாதங்கி (மரகத)

அனுபல்லவி

மாரகோடி தேஜோ மய—நிதர்ஸினி
மாத்ரு மண்டல ஸம்யுதே தேவி (மரகத)

சரணம்

ஸுர முனி வர பூஜித—ஜனனி
ஸ்மரஜன பரி பாலினி—நிரஞ்ஜனி
நவகோடி ஸ்ரீ மஹா துர்காம்பிகா
நவமங்கள தாயகி கோலாபுர நாயகி (மரகத)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

மரகத மணியால் வசீகரமாக அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ மூகாம்பிகை ஸிம்ஹவாகனத்திலே ஆனந்தமாக அமர்ந்திருக்கும் சங்கரிதேவி! சரணம்.

கோடி சூர்யனின் கதிர்களுக்கும், இணையே இல்லாத ஒளியுடன் ஜ்வலிப்பவளே, ஸ்ரீ சக்ரங்களுக்கு ஆவரண தேவியாக வீற்றிருந்து வரம் அளிப்பவளே!.

ஸுர முனிவர்களால் ச்ரத்தையுடன் பூஜிக்கப்பட்ட தேவியானவள், தன்னை ஸதா நினைத்தவர்களை பரிபாலிக்க எங்கும் நிறைந்தவளே ! ஆயிரம்கோடி துர்க்கைக்கு சமமான அம்பிகையே நவ மங்களமும் அளிக்க கொல்லூரில் (கோலாபுரம்) அமர்ந்த வளுமான மூகாம்பிகையே சரணம் அம்மா !!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

துர்க்கா தேவி பாஹிமாம் - ஜய
துக்க நிவாரிணி சிவ நி (துர்க்கா)

அனுபல்லவி

தர்ம ஸாக்ஷி - ஸர்வலோக ஜனனி
நிர்மல பூஜித நித்ய ஸாக்ஷி (துர்க்கா)

சரணம்

ஆதித்ய வார ஸுபூஜிதே வரதே
அக்ஷரா அநுக்ரஹ வரப்ரதே
மங்கள வார ஸுபூஜிதே வரதே
மாங்கல்ய தாரண வரப்ரதே
சுக்ர வார ஸுபூஜிதே வரதே
சௌபாக்ய சௌமாங்கல்ய வரப்ரதே (துர்க்கா)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

துர்க்கா தேவி என்னை காப்பாற்று அம்மா, துக்கங்களைப் போக்கிடும் சிவசக்தியான அம்பா என்னை காப்பாற்று.

லோகத்தில் தர்மத்திற்கு சாக்ஷியாக இருப்பவளே ! நிர்மலமான மனத்துடன் பூஜிப்பவர்களுக்கும் ஸாக்ஷியாகவும் இருக்கும் அம்பிகையே !! என்னை காப்பாற்று.

ஞாயிற்றுக்கிழமைகளில் பூஜித்து வருபவர்களுக்கு அக்ஷரங்களால் நன்மைகள் ஏற்படுத்தவும் செவ்வாய்க்கிழமைகளில் பூஜித்து வருபவர்களுக்கு கல்யாண நன்மைகளை ஏற்படுத்தவும், வெள்ளிக் கிழமைகளில் பூஜித்து வருபவர்களுக்கு சகல சௌபாக்கியமும், சௌமாங்கல்யமும் அருள்பவளான துர்க்கே அம்பா என்னை காப்பாற்று அம்மா.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : சந்த்ர கௌன்ஸ் தாளம் : ஆதி

பல்லவி

தேவி த்ருபுர ஸுந்தரி—தயாநிதி
திவ்ய ஸுந்தரி சிவ மனோஹரி (தேவி)

அனுபல்லவி

புவிப்ரகாஸினி பவ ப்ரிய தர்ஸினி
புவனேஸ்வரி பாஹி பாஹி (தேவி)

சரணம்

தாருகா வன ப்ரிய மோஹினி
மேரு மத்ய வாஸினி
மார கோடி வதனி—பவானி
மஹிஷாஸுர மர்த்தனி ஜகத்ஜனனி (தேவி)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

தேவி த்ருபுர ஸுந்தரி, கருணை கடலே, அழகே சுந்தரியே ! பரமசிவனின் மனம் நிறைந்தவளே அம்மா.

உலகில் பக்தர்களுக்கு மிகுந்த ப்ரகாசத்துடன் காக்ஷி அளித்துக்கொண்டிருப்பவளும் அகில புவனங்களை எல்லாம் காப்பவளுமான தேவி என்னையும் காப்பாற்று.

தாருகா வனத்தில் உல்லாசமாக சஞ்சரிப்பவளும் ஸ்ரீசக்ரத்தின் மத்தியில் ஆனந்தமாக வீற்றிருப்பவளும், கோடி சூர்ய கிரணங்களின் ஒளியுடன் நிறைந்த பவானி அம்பா, மஹிஷாஸுர மர்த்தனி ஆகிய ஜகத்ஜனனியே தேவி என்னை காப்பாற்று அம்மா.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம் : ரஞ்ஜனி தாளம் : ரூபகம்

பல்லவி

கமலே கமலலோசனே — விமலே
ஸத் ஹ்ருதய வாஸினி (கமலே)

அனுபல்லவி

நாத ரூபிணி — நிரஞ்ஜனி
ஸ்வரூபிணி — ப்ரகாஸினி (கமலே)

சரணம்

காத்யாயனி கஞ்சலோசனி
காமிதார்த்த பல தாயினி
ஸ்ரீசக்ர ரூபிணி — மந்த்ரிணி
ஸ்ரீநகர நிவாஸினி (கமலே)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

கமலே, தாமரையை ஒத்த அழகான கண்களையுடையவளே, நீ எப்பொழுதும் எல்லோருடைய மனதிலேயும் வாசம் செய்பவளே அம்மா.

நாதத்தின் ஒலியாக எங்கும் நிறைந்திருப்பவளும், எங்கும் ஒளிமயமாக ப்ரகாசித்துக்கொண்டிருப்பவளுமான தாயே கமலே.

காத்யாயனி, கஞ்சலோசனி, கருணாகடலே பல நாமாக்கள் கொண்டு பலருக்கும் நினைத்த வரங்களை கொடுக்கக்கூடியவளும் ஸ்ரீசக்ர ஸ்வரூபியாகவும், மந்த்ரங்கள் நிறைந்தவளாகவும் ஸ்ரீநகரம் என்னும் திருவாரூரில் நிலையாக வாசம் செய்யக் கூடியவளாகவும் உள்ள தாயே கமலே காப்பாற்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ராகம்: கர்நாடக தேவகாந்தாரி தாளம்: – ஆதி

பல்லவி

அகிலாண்டேஸ்வரி—ஜகதம்பா பாஹி (அகிலா)

அனுபல்லவி

அகில லோக ஜனனி – ஆனந்த சுந்தரி
தாடங்க மந்த்ரிணி தயாநிதே சங்கரி (அகிலா)

சரணம்

ஜம்பு கேஸ்வர மனோல்லாஸினி
கஜபூஜித விசேஷணா—கோ ஸ்த்ரி நித்ய பூஜித
பஞ்ச ப்ரகார (ரோஸ்தவ) உத்ஸவ ப்ரியதாயினி
ப்ரபஞ்ச காரண நாத வேத ப்ரகாஸினி (அகிலா)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள்

அகிலாண்டேஸ்வரி அம்பா! உலகத்தை எல்லாம் படைத்தவளே காப்பாற்று அம்மா. எல்லா உலகிலும் வியாபித்து நிறைந்திருக்கும் சுந்தரியே! உனது தாடங்க மந்த்ர சக்தியால் உனது தயவை தந்தருளும் அம்மா தாயே.

ஜம்புகேஸ்வரரின் அன்பிற்கு உகந்தவளே! யானை, பசுவைக் கொண்டு நித்ய பூஜையையும் செய்தவளே! பஞ்சப்ரகார உத்ஸவத்தில் ப்ரியத்தோடு உடன் இருந்தவளே, உலகத்தை உருவாக்கும் நாத வேதரூபமாக ஒளியுடன் இருப்பவளே அம்மா காப்பாற்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சரணம் சரணம் சரணம் நவசரணம்

ராகம் : அம்ருதவர்ஷணி

மீனாக்ஷி தாயே சரணம்
மீன லோசனி சரணம்
மதுரா நாயகி சரணம்
மங்களம் தந்திடு சரணம் (1)

காமாக்ஷி தாயே சரணம்
கருணை கடாக்ஷி சரணம்
கோடி ஜனனியே சரணம்
காமகோடி நி சரணம் (2)

விசாலாக்ஷியே சரணம்
விமலே சுந்தரி சரணம்
அன்ன பூரணி சரணம்
அமிர்த வர்ஷணி சரணம் (3)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அகிலாண் டேஸ்வரி சரணம்
அகில ஜனனி சரணம்
தாடங்க மந்த்ரிணி சரணம்
தனநிதி தந்திடு சரணம் (4)

கமலாம் பிகையே சரணம்
விமலே சுந்தரி சரணம்
ஈசான்ய நாயகி சரணம்
ஈவஸ்வர ப்ரியகரி சரணம் (5)

ராஜராஜேஸ்வரி சரணம்
ரமணீய சுந்தரி சரணம்
ஸ்ரீசக்ர நாயகி சரணம்
ஸ்ரீ லலிதாம்பிகே சரணம் (6)

சாரதே சங்கரி சரணம்
ச்ருங்க நிவாஸினி சரணம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

லோககுரு ஜனனி சரணம்
ஸகலே வித்யே சரணம் (7)

அபிராமி அன்னையே சரணம்
ஆனந்த சுந்தரி சரணம்
ஆதிபரா சக்தி சரணம்
ஆயிரதன மத்யே சரணம் (8)

மங்களாம் பிகையே சரணம்
மூகாம்பிகையே சரணம்
துர்க்காம் பிகையே சரணம்
துக்க நிவாரணி சரணம் (9)

சுப சரணம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri
CC-O. In Public Domain. Digitized by eGangotri

மங்களம்

சாரத தேவிமே சுப மங்களம்
மத கஜ காமினி - மதிர்மத லோசனி
பத நத பாலினி பாதக சமனி
நர கிரி பாரதி - கர கமலார்ச்சிதே
ஸரஜீஜாஸன ஸந்துத சரிதே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சாரத தேஹிமே சுப மங்களம்

சாரதா சாரதாம் போஜ
வதனு வதனும் புஜ
ஸர்வதா ஸர்வதாஸ்மகம்
ஸந்நிதிம் ஸந்நிதிம் குரு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri